KANCHIPURAM DISTRICT

# இரண்டாம் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2018

K

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

நேரம்: 1.30 மணி

## வணிகவியல்

மதிப்பெண்கள்: 45

### பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10 x 1 = 10

1. புதிய வெளியீடுகளுக்கான தொழில் முறைகளில் எது மிக அதிக செலவை ஏற்படுத்தும்?
   a) பொது வெளியீடு  b) விற்பனைக்கான முனைவு
   c) உரிமை வெளியீடு  d) இடைநிலையர்கள் வாயிலாக
2. பங்கு மாற்றகத்தில் பங்குகளை வாங்க, விற்க மேற்கொள்ளும் செயல்பாட்டினை வரிசைப்படுத்து.
   1. அளிப்பாணை வழங்குதல்
   2. தரகரைத் தேர்ந்தெடுத்தல்
   3. தீர்வு
   4. ஆணையைச் செயலாக்குதல்

   a) 1,2,3,4  b) 2,4,1,3  c) 1,4,2,3  d) 2,1,4,3
3. கலைமான் ஊக வணிகர் _______ எனவும் அழைக்கப்படுவர்.
   a) தெஜிவாலா  b) மண்டிவாலா
   c) முனைம வேட்டையாளர்  d) முடக்கப்பட்டவர்
4. இந்தியாவில் ஏற்பிசைவு பெற்ற பங்கு மாற்றங்களின் எண்ணிக்கை
   a) 20  b) 21  c) 22  d) 23
5. எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்
   a) கரடி  b) காளை  c) கலைமான்  d) முட வாத்து
6. விண்ணப்பத் தொகை ஒரு பங்கின் மதிப்பு தொகையில் _______ சதவிகிதத்துக்கு குறைவாக இருத்தல் கூடாது.
   a) 25  b) 15  c) 10  d) 5
7. உறுப்பினர் சேவை என்பது இதன் முக்கிய குறிக்கோள்.
   a) கூட்டாண்மை  b) கூட்டு பங்கு நிறுமம்
   c) கூட்டுறவு சங்கம்  d) பொதுத்துறை நிறுவனங்கள்
8. இராபர்ட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை தொடங்கிய ஆண்டு
   a) 1844  b) 1944  c) 1984  d) 2014
9. சரியானவற்றை பொருத்தி வரிசைப்படுத்துக.

| | |
|---|---|
| 1. பிரதம நாணய சங்கங்கள் | - அ. கிராம அளவில் |
| 2. மாநில கூட்டுறவு வங்கி | - ஆ. மாநகரம் / பெரு நகரங்களில் |
| 3. கூட்டுறவு மைய வங்கி | - இ. தலைமை வங்கி |
| 4. கூட்டுறவு சிறப்பங்காடிகள் | - ஈ. மாவட்டங்களில் இயங்கும் |

   a) 1,2,3,4  b) 3,1,2,4  c) 1,3,4,2  d) 1,4,3,2
10. கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களின் உச்ச அளவு
   a) 5  b) 25  c) 50  d) வரையறை இல்லை

Scanned by CamScanner

## பகுதி - ஆ

**II.** எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி: *(வினா எண். 11 கட்டாய வினா)* 4 x 2 = 8

11. பத்திரம் என்றால் என்ன?
12. தன் வணிகர் என்று யாரைக் குறிப்பிடுகிறோம்?
13. சிறுகுறிப்பு வரைக : காளை ஊக வணிகர்
14. "பரஸ்பர நிதி"களுடன் "சிறு துளி பெருவெள்ளம்" என்ற கோட்பாட்டை ஒப்பிடுக.
15. கூட்டுறவு - வரையறு.
16. ஆதரவுப் பங்காதாயம் என்றால் என்ன?
17. எந்தக் குழுவின் ஆலோசனைப்படி கூட்டுறவை அமைக்கும் அதிகாரம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு மாற்றப்பட்டது.

## பகுதி - இ

**III.** எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி: *(வினா எண். 18 கட்டாய வினா)* 4 x 3 = 12

18. பட்டியலிடுதல் என்றால் என்ன? பட்டியலிடப்பட்ட பத்திரங்களை வகைப்படுத்துக.
19. முதலீட்டாளருக்கும் ஊக வணிகருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் மூன்று)
20. போல்ட் என்றால் என்ன? அதன் சாதனைகள் யாவை?
21. பங்கு மாற்றத்தினால் முதலீட்டாளர்களுக்கு ஏற்படும் நன்மைகளை எழுதுக. (ஏதேனும் மூன்று)
22. கூட்டுறவு அமைப்பின் குறைபாடுகளைக் கூறுக. (ஏதேனும் மூன்று). முன்னேற்றத்திற்கு தகுந்த ஆலோசனையை எழுதுக.
23. "கூட்டுறவு சங்கத்தின் மேலாண்மை மக்களாட்சி அடிப்படையில் அமைந்திருக்கிறது" - விளக்கவும்.
24. கூட்டுறவு அமைப்பை தோற்றுவிக்க பின்பற்ற வேண்டியவைகளை சுருக்கமாக எழுதுக.

## பகுதி - ஈ

**IV.** அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 3 x 5 = 15

25. அ) முதன்மை சந்தையில் புதிய பங்குகள் எவ்வாறு வெளியிடப்படுகின்றன?

*(அல்லது)*

ஆ) கூட்டுறவு சங்கத்தின் சிறப்பியல்புகளில் ஏதேனும் ஐந்து விளக்கம் தருக.

26. அ) செபியின் நோக்கங்கள் மற்றும் இயல்புகளை எழுதுக.

*(அல்லது)*

ஆ) கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தந்து அதன் சிறப்பியல்புகளை தருக.

27. அ) பங்கு மாற்றகத்தில் பத்திரங்களை வாங்க அல்லது விற்க வாடிக்கையாளர் தரகருக்கு அளிப்பாணை வழங்கும் முறைகளை சுருக்கமாக எழுதுக.

*(அல்லது)*

ஆ) கூட்டுப் பங்கு நிறுமத்திற்கும், கூட்டுறவுச் சங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறுக. (ஏதேனும் ஐந்து)

******

Scanned by CamScanner